[4th November 1958

Industries started in Coimbatore district

* 828 *Q.*—Sri P. G. MANICKAM : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) முதலாவது ஐந்தாண்டு திட்ட காலத்திலே என்னென்ன தொழிற்சாலைகள் எந்தெந்த இடங்களிலே கோயமுத்தூர் ஜில்லாவிலே கவர்ன்மெண்டாலும், கவர்ன்மெண்டு உதவியோடு தனிப்பட்டவர்களாலும் நிறுவப்பட்டிருக்கின்றன ?

(ஆ) இரண்டாவது ஐந்தாண்டு திட்ட காலத்திலே என்னென்ன தொழிற்சாலைகள் எந்தெந்த இடங்களிலே ஏற்படுத்துவதற்காக கவர்ன் மெண்டால் திட்டமிடப்பட்டிருக்கின்றன ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) No industry was started by the Government in Coimbatore district during the First Five-Year Plan period. A statement [a] showing the names of the industrial units in the private sector which were sanctioned loans under the State Aid to Industries Act is placed on the table of the House.

(*b*) The Government do not propose to start any major industry in the Coimbatore district during the Second Five-Year Plan period.

Sri P. G. MANICKAM : மேஜை மீது வைக்கப்பட்டுள்ள கணக்கின் படி மில்களுக்கு அதிகக் கடன் வழங்கப்பட்டிருக்கிறது. அப்படிப் பட்ட மில்களில் குறிப்பாக ஏழை தொழிலாளர்களையும், ஹரிஜனங்களையும் வேலைக்கு அமர்த்துவதுபற்றி இங்கே கவனிக்கப்படவில்லை என்பதைப் பற்றி இந்த சட்ட சபையில் பல தடவை சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே குறிப்பாக ஹரிஜனங்களுடைய நன்மையைக் கருதி ஒரு குறிப்பிட்ட அளவு ஹரிஜனங்களை வேலைக்கு அமர்த்திக்க வேண்டும் என்பதைப் பற்றி மில்காரர்களுக்கு இந்த அரசாங்கம் தெரிவிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri M. BHAKTAVATSALAM : இப்பொழுது கேட்கப்படுகிற உப கேள்வி மூல கேள்விக்கு ஒன்றும் சம்பந்தம் இல்லை என்று நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

Harijan Christians treated on a par with Harijan Hindus

* 829 *Q.*—Sri S. LAZAR : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether Harijan Christians are treated on a par with Harijan Hindus in the matter of (i) supply of a pair of plough bulls, (ii) assignment of lands and house-sites, (iii) allotment of residential houses in colonies, and (iv) employment opportunities?

The Hon. Sri P. KAKKAN : The Harijan converts are treated on a par with Harijan Hindus in the matter of provision of house-sites and assignment of land for cultivation purposes but not treated on a par with Harijan Hindus in the supply of plough bulls, allotment of residential houses and employment opportunities.

Sri S. LAZAR : பொருளாதாரத் துறையில் அவர்களும் உயர வேண்டுமென்ற நொக்கத்துடன் அநேகப்பட்ட சலுகைகள், அதாவது மாடுகள் கொடுப்பது, வீடுகள் கட்டிக் கொள்வதற்கு இடம் தருவது, தொழில்களை நடத்துவதற்கு வசதிகள் செய்து கொடுப்பது, இப்படிப்பட்ட மூன்று வழிகளிலும் அவர்களுக்கும் சமமான அளவு கொடுக்கப்படாதன் காரணம் என்ன ?

---

[a] Printed as Appendix V on page 586 infra.